006348

6613
28/07/23

DIRECTORATE OF TRIBAL WELFARE
19 JUL 2023
CHEPAUK, CHENNAI-5

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – பணியிடையே மரணமடைந்த ஊழியர் திரு.M.ஜார்ஜ் என்பவரது மகன் - திரு.G.அசோக்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டது – பணி வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

19/07/23

### ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசாணை (பா) எண்.174

நாள்: 17.07.2023
சோபகிருது ஆண்டு
ஆடி 1- ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்:18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.
2. பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண்.பமே/எ2/4849/2022,நாள்.02.08.2022.

**********

**ஆணை:**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் காப்பாளராக பணிபுரிந்த போது 26.04.2002 அன்று பணியிடை மரணமடைந்த திரு.M.ஜார்ஜ் என்பவரது மகன் திரு.G.அசோக்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசு விதிகளின்படி தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, 06.02.2020 முற்பகல் முதல் பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமன நாள் முதல் வரன்முறை செய்து, உரிய ஆணை பிறப்பிக்குமாறும் அரசைக் கோரியுள்ளார்.

2. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துரு உரிய ஆவணங்களுடன் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு அதனடிப்படையில், கருணை அடிப்படையில் 06.02.2020 அன்றைய தேதியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும், திரு.G.அசோக்குமார் என்பவர்

அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 06.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறைகளின் இசைவினை முறையே அதன் அலுவல் சாரா குறிப்பு எண். 4276/ட்டி 1/2023-1, நாள். 13.06.2023 மற்றும் அலுவல் சாரா குறிப்பு எண். 4964392/G2/2023, நாள். 28.06.2023 -இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. லட்சுமி பிரியா,
அரசு செயலாளர்.

பெறுநர்:-

திரு.G.அசோக்குமார், த/பெ.திரு.M.ஜார்ஜ் (late),
இளநிலை உதவியாளர்,
பழங்குடியினர் நல இயக்குநரகம், சென்னை மாவட்டம்.
(பழங்குடியினர் நல இயக்குநர் வழியாக)
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை 600 005.
இயக்குநர், ஆதி திராவிடர் நலம், சென்னை-600 005.
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
சென்னை மாவட்டம்.
மாவட்டக் கருவூல அலுவலர், சென்னை மாவட்டம்.
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை -600 018 / 35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-600 008.

நகல்:-

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,
செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//